வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3898/ஆ2/2024 நாள்: 30.10.2024

| | |
|---|---|
| பொருள்: | பள்ளிக் கல்வி–வேலூர் மாவட்டம்–2023–2024 ஆம் கல்வியாண்டில்–அரசு பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயின்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பிரிவைச் சார்ந்த மாணவியர்கள்–கல்வி உதவித் தொகை விடுவிக்க–வங்கிக் கணக்குடன் ஆதார் கணக்கை இணைக்க தெரிவித்தல்–இணைப்பில் உள்ள google sheet படிவத்தில் விவரங்களை பூர்த்தி செய்ய தெரிவித்தல்–சார்பு. |
| பார்வை: | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரின் கடித ந.க.எண்.என்4/16469/2024 நாள்: 25.10.2024 |

---------

வேலூர் மாவட்டம் , 2023–2024 ஆம் கல்வியாண்டில் அரசு பள்ளிகளில் 9 மற்றும் 10 வகுப்பு கல்வி பயின்ற பிற்படுத்தப்பட்டோர் , மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பிரிவை சார்ந்த மாணவியர்களுக்கு, கீழ்காணும் காரணங்களால் கல்வி உதவித்தொகை விடுவிக்க இயலாத நிலையில் உள்ளது என பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. வங்கி கணக்கு துவங்காமல் இருத்தல்.
2. வங்கி கணக்கில் போதிய இருப்புத் தொகை இல்லாமல் இருத்தல்.
3. வங்கி கணக்கு துவங்கப்பட்டு ஆதாருடன் இணைக்கப்படாமல் இருத்தல்.(Aadhar Seeded Bank Account).

மேலும், இணைப்பு –1 ல் காணும் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் , மேற்காண் பொருள் மீது உடனடி யாக நடவடிக்கை மேற்கொண்டு , தங்கள் பள்ளிகளின் மாணவியர்களின் பெயர் பட்டியல் அடங்கிய இணைப்பு –2ல் உள்ள கூகுள் ஷீட்டில் (google sheet Link) கோரப்பட்டுள்ள விவரங்களை பூர்த்தி செய்யவும், கல்வித்தொகை விடுவிக்க இயலாமல் உள்ள மேல் குறிப்பிட்டுள்ள காரணங்களை நிவர்த்தி செய்து அதனை ரீமார்க்ஸ் (Remarks) காலத்தில் (column) பூர்த்தி செய்ய சார்ந்த பள்ளித் தலைமையாசியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:

1. பள்ளிகளின் பெயர் பட்டியல் (மாணவியர்களின் எண்ணிக்கையுடன்)
2. Google sheet.

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்
சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலை)
வேலூர் மாவட்டம்.
(தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது).